36. கீழ்காண்பவற்றுள் வெப்பநிலைமானியின் ஓர் வகை அல்லாதது எது?

(1) ஆய்வக வெப்பநிலைமானி (2) மருத்துவ வெப்பநிலைமானி

(3) டிஜிட்டல் வெப்பநிலைமானி (4) பள்ளி வெப்பநிலைமானி

37. மருத்துவ வெப்பநிலைமானிகளில் சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(1) செல்சியஸ் அளவுகோல் - 35 $^0$C முதல் 108 $^0$C

(2) செல்சியஸ் அளவுகோல் - 35 $^0$F முதல் 108 $^0$F

(3) ஃபாரன்ஹீட் அளவுகோல் - 94 $^0$C முதல் 108 $^0$C

(4) ஃபாரன்ஹீட் அளவுகோல் - 94 $^0$F முதல் 108 $^0$F

38. மருத்துவ வெப்பநிலைமானிகளில் சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(1) செல்சியஸ் அளவுகோல் - 35 $^0$C முதல் 42 $^0$C

(2) செல்சியஸ் அளவுகோல் - 35 $^0$F முதல் 42 $^0$F

(3) ஃபாரன்ஹீட் அளவுகோல் - 94 $^0$C முதல் 108 $^0$C

(4) ஃபாரன்ஹீட் அளவுகோல் - 95 $^0$F முதல் 108 $^0$F

39. மருத்துவர்கள் வெப்பநிலையை செல்சியஸில் குறிப்பிடாமல் ஃபாரன்ஹீட்டில் குறிப்பிடக் காரணம் _______.

(1) செல்சியஸ் வெப்பநிலைமானியை ஒப்பிட ஃபாரன்ஹீட் வெப்பநிலைமானியில் பிரிவுகள் அதிகமிருப்பதால் துல்லியத்தன்மையை அதிகரிக்க.

(2) செல்சியஸ் வெப்பநிலைமானியை ஒப்பிட ஃபாரன்ஹீட் வெப்பநிலைமானியில் பிரிவுகள் அதிகமிருப்பதால் துல்லியத்தன்மையை குறைக்க.

(3) ஃபாரன்ஹீட் வெப்பநிலைமானியை ஒப்பிட செல்சியஸ் வெப்பநிலைமானியில் பிரிவுகள் அதிகமிருப்பதால் துல்லியத்தன்மையை அதிகரிக்க.

(4) ஃபாரன்ஹீட் வெப்பநிலைமானியை ஒப்பிட செல்சியஸ் வெப்பநிலைமானியில் பிரிவுகள் அதிகமிருப்பதால் துல்லியத்தன்மையை குறைக்க.

40. ஆய்வக வெப்பநிலைமானியானது _______ முதல் _______ வரையிலான அளவுகளைக் கொண்டுள்ளது.

(1) $10^0$ முதல் $110^0$ செல்சியஸ் வரை (2) $-10^0$ முதல் $110^0$ செல்சியஸ் வரை

(3) $10^0$ முதல் $110^0$ ஃபாரன்ஹீட் வரை (4) $-10^0$ முதல் $110^0$ ஃபாரன்ஹீட் வரை

41. வெப்பநிலைமானிகளின் நுண்குழாயினுள் குறுகிய வளைவு கொண்ட வெப்பநிலைமானி எது?

LIVEWORKSHEETS

(1) ஆய்வக வெப்பநிலைமானி (2) மருத்துவ வெப்பநிலைமானி

(3) டிஜிட்டல் வெப்பநிலைமானி (4) பள்ளி வெப்பநிலைமானி

42. திரவங்களுக்கு பதிலாக ஓர் உணர்வியினைக் கொண்ட வெப்பநிலைமானி எது?

(1) ஆய்வக வெப்பநிலைமானி (2) மருத்துவ வெப்பநிலைமானி

(3) டிஜிட்டல் வெப்பநிலைமானி (4) பள்ளி வெப்பநிலைமானி

43. மனித உடலின் சராசரி வெப்பநிலை _______.

(1) 37 $^0$C (2) 98.6 $^0$F (3) 310.15 K (4) அனைத்தும் சரி

44. கீழ்க்காண்பவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு.

(1) F - 32 / 9 = C - 0 / 5 (2) C - 32 / 9 = F - 0 / 5

(3) F - 9 / 32 = C - 0 / 5 (4) C - 5 / 9 = F - 0 / 32

45. 500 $^0$C க்கு சமமான வெப்பநிலை K ல் _______.

(1) 773 K (2) 227 K (3) 773.15 K (4) 226.85 K

46. வெப்பநிலையுடன் தொடர்புடைய அறிவியலாளர் _______.

(1) கெல்வின் (2) செல்சியஸ் (3) ஃபாரன்ஹீட் (4) அனைவரும்

47. வெப்பநிலைமானியுடன் தொடர்புடைய அறிவியலாளர் _______.

(1) கெல்வின் (2) செல்சியஸ் (3) ரான்கீன் (4) அனைவரும்

48. சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

(1) F - 32 / 9 = C - 0 / 5 (2) K = C = 273.14 (3) R = F = 4569.67 (4) அனைத்தும் சரி

49. ஃபாரன் ஹீட் அளவீட்டை தனிச் சுழி அளவீட்டு முறைக்கு மாற்ற உதவுவது _______.

(1) ரான்கீன் அளவீட்டு முறை (2) கெல்வின் அளவீட்டு முறை

(3) செல்சியஸ் அளவீட்டு முறை (4) அனைத்தும் சரி.

50. 1 $^0$R ல் ஏற்படும் மாற்றம் _______ க்குச் சமம்.

(1) 1 $^0$C (2) 1 $^0$F (3) 1 K (4) 10 $^0$C.

51. ஒருவர் இரு பாத்திரங்களில் முறையே (A) பனிக்கட்டி, (B) கொதிநீர் வைத்துள்ளார். வெப்பநிலை 30 $^0$C உள்ள அறையில் இவற்றை வைத்து 5 நிமிடங்கள் கழித்து C, D என்ற இரு வெப்பநிலைமானிகளைக் கொண்டு அளவிடுகின்றார். தற்போது (A), (B) - ன் வெப்பநிலை_______.

(1) C, D ஆகிய இரு வெப்பநிலைமானிகளிலும் வெப்பநிலை உயர்ந்திருக்கும்.

(2) C, D ஆகிய இரு வெப்பநிலைமானிகளிலும் வெப்பநிலை தாழ்ந்திருக்கும்.

LIVEWORKSHEETS

(3) வெப்பநிலையானது வெப்பநிலைமானி C - ல் உயர்ந்தும் D - ல் தாழ்ந்தும் இருக்கும்.

(4) வெப்பநிலையானது வெப்பநிலைமானி C - ல் தாழ்ந்தும் D - ல் உயர்ந்தும் இருக்கும்.

52. ஒரு பொருளிலுள்ள அணுக்கள் எப்போது மிகவும் விலகியிருக்கும்?

(1) குறைந்த வெப்பநிலையில் உள்ளபோது (2) உயர் வெப்பநிலையில் உள்ளபோது

(3) அறை வெப்பநிலையில் உள்ளபோது (4) அனைத்து வெப்பநிலைகளிலும்.

53. வெப்ப ஆற்றலினால் ஏற்படும் விளைவு எது?

(1) விரிவடைதல் (2) நிலை மாறுதல்

(3) வெப்பநிலை உயர்தல் (4) அனைத்தும்

54. பின்வருவனவற்றுள் திடப்பொருள் திரவமாக மாறும் நிகழ்வு எது?

(1) ஆவியாதல் (2) பதங்கமாதல் (3) உருகுதல் (4) குளிர்தல்

55. பின்வருவனவற்றுள் திரவப்பொருள் வாயுவாக மாறும் நிகழ்வு எது?

(1) ஆவியாதல் (2) பதங்கமாதல் (3) உருகுதல் (4) குளிர்தல்

56. பின்வருவனவற்றுள் திடப்பொருள் திரவமாக மாறும் நிகழ்வு எது?

(1) நீர் நீராவியாதல் (2) பால் தயிராதல்

(3) பனிக்கட்டி நீராக மாறுதல் (4) பால் புளித்தல்

57. பின்வருவனவற்றுள் பதங்கமாகும் பொருள் எது?

(1) வெண்ணெய் (2) கற்பூரம் (3) மெழுகுவர்த்தி (4) சமையல் உப்பு

58. பின்வருவனவற்றுள் வாயுப்பொருள் திரவமாக மாறும் நிகழ்வு எது?

(1) ஆவியாதல் (2) பதங்கமாதல் (3) உருகுதல் (4) குளிர்தல்

59. பின்வருவனவற்றுள் திரவப்பொருள் திண்மமாக மாறும் நிகழ்வு எது?

(1) ஆவியாதல் (2) படிதல் (3) உருகுதல் (4) உறைதல்

60. பின்வருவனவற்றுள் வாயுப்பொருள் திண்மமாக மாறும் நிகழ்வு எது?

(1) ஆவியாதல் (2) படிதல் (3) உருகுதல் (4) உறைதல்

61. பின்வருவனவற்றுள் வெப்பம் பரவும் முறை எது?

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) வெப்பக் கதிர்வீசல் (4) அனைத்தும்.

62. திடப்பொருள்களில் வெப்பம் பரவும் முறை எது?

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) வெப்பக் கதிர்வீசல் (4) அனைத்தும்.

63. திரவ, வாயுப்பொருள்களில் வெப்பம் பரவும் முறை எது?

LIVEWORKSHEETS

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) 1 மற்றும் 2 (4) வெப்பக்கதிர்வீசல்

64. வெற்றிடத்திலும் வெப்பம் பரவும் முறை எது?

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) 1 மற்றும் 2 (4) வெப்பக்கதிர்வீசல்

65. எம்முறையில் வெப்பம் பரவுவதைத் தடுக்க சமையல் பாத்திரங்களின் கைப்பிடி மரம் அல்லது நெகிழிப் பொருள்களால் செய்யப்படுகிறது?

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) வெப்பக் கதிர்வீசல் (4) அனைத்தும்.

66. நிலக்காற்று மற்றும் கடல்காற்று ஆகிய நிகழ்வுகளுக்கு காரணம் எது?

(1) வெப்பக் கடத்தல் (2) வெப்பச் சலனம் (3) வெப்பக் கதிர்வீசல் (4) அனைத்தும்.

67. கற்பனையாக வெப்பம் கதிர்வீச்சு முறையில் பரவாமல் இருக்குமாயின், எதிலிருந்து நாம் வெப்ப ஆற்றலைப் பெற இயலாது?

(1) சூரியன் (2) சலவைப் பெட்டி (3) மின் சூடேற்றி (4) அனைத்தும்

68. வெளிர் நிறங்கொண்ட வெளிநாட்டினர் கருப்பு நிற ஆடைகளை அணியக் காரணம்

(1) அவர்களுக்கு கருப்பு நிறம் மிகவும் பிடிக்கும்.

(2) அவர்களுக்கு வெள்ளை நிறம் பிடிக்காது.

(3) குளிரிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்காக.

(4) வெப்பத்திலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்காக.

69. கீழ்க்காண்பவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(1) 1 கலோரி - 4.189 ஜூல்

(2) 1 கலோரி - 4189 ஜூல்

(3) 1 கிலோ கலோரி - 4189 ஜூல்

(4) 1 கிலோ கலோரி - 4200 ஜூல் (தோராயமாக)

70. வெப்ப ஏற்புத் திறனின் குறியீடு ______.

(1) C (2) Q (3) T (4) C'

LIVEWORKSHEETS